[திரு. கே.பி. அன்பழகன்] [2005 செப்டம்பர் 29

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சட்டமாக இருந்தாலும், சட்டமன்றத்தின் ஒப்புதல் இருந்தால்தான் அது சட்டமாக வரமுடியும். சட்டமன்றம் அமர்வில் இல்லாதபோது ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் அது காலாவதியாகிவிடும். அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 213-ல் இது விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. என்ன இது? என்ன Point of Order இது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

2005 செப்டம்பர் 29]

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இல்லை, இல்லை. அதைத்தான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம், நன்றி.

பின்னர், பேரவை பிற்பகல் 1–02 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–அலுவல் ஒழுங்கு முறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/CBR/1/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]